**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

------------

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT No.I, PERAMBALUR**

| | | |
|---|---|---|
| Case Number | : | C.C.No. 372/2025 |
| Prosecution Witness | : | **அ.சா.** 2 |
| Name | : | **திருமதி. ஹேமலதா (காவல் ஆய்வாளர் )** |
| Father's / Husband Name | : | **சக்திவேல்** |
| Address | : | **மதுவிலக்கு அமலாக்க பிரிவு, பெரம்பலூர்** |
| Age | : | 50/2026 |

**தேதி : 05.08.2026**

சாட்சிக்கு நீதிமன்ற உதவியாளர் திருமதி.ஆ. சத்தியபாமா சத்தியபிரமாணம் செய்யப்பட்டு, விசாரணைக்கு அனுமதிக்கப்பட்டது. **எதிரி ஆஜர் இல்லை. பிரிவு 355 BNSS ன் படி மனு கொடுக்கப்பட்டு அனுமதிக்கப்பட்டது.**

**முதல் விசாரணை**

நான் தற்போது பெரம்பலூர் மதுவிலக்கு அமலாக்க பிரிவ காவல் நிலையதில் காவல் ஆய்வாளராக பணியாற்றி வருகிறேன். கடந்த 23.03.2025ம் தேதிஅன்று பெரம்பலூர் மதுவிலக்கு அமலாக்க பிரிவில் இரண்டாம் நிலை காவலராக அ.சா. 1 பணியில் இருந்தார். அன்றைய தினம் தலைமை காவலராக கிருஷ்ணமூர்த்தி என்பவருடனும், காவல் ஆய்வாளர் நானும் அ.சா. 1 வுடன் மதியம் 3.00 மணி அளவில் மது ரோந்து பணியாக வாலிகண்டபுரம் பகுதியில் ரோந்து பணியில் இருந்தபோது 60 வயது மதிக்கத்தக்க பெண் நபர் எங்களை பார்த்ததும் தப்பி ஓட முயன்றவரை பிடித்து விசாரணை செய்தபோது அவர் பெயர் முத்தம்மாள் என்று சொன்னால் அவர் கையில் வைத்திருந்த பையை வாங்கி பரிசோதனை செய்தபோது 180 எம். எல் அளவுள்ள Express பிராந்தி பாட்டில்கள் 28 யினை வைத்திருந்தார்.

அது பற்றி அவரிடம் கேட்டபோது அரசு மதுபான கடையில் சிறுக சிறுக அவற்றை வாங்கி டாஸ்மாக் கடையை மூடிய பின்னர் கூடுதல் விலைக்கு விற்பதாக சொன்னவரை குற்ற காரணம் கூறி கைது செய்யப்பட்டார். அவரிடமிருந்து சாட்சிகள் அ.சா. 1 முன்னிலையிலும், கிருஷ்ணமூர்த்தி முன்னிலையிலும் மேற்கண்ட வழக்கு சொத்துக்கள் கைப்பற்றுதல் மகசரில் கைப்பற்றப்பட்டது. அது உரிய வழிகாட்டுதலை பின்பற்றி வழக்கு சொத்து சம்பவ இடத்தின் அருகிலேயே பாதுகாப்பாக அழிக்கப்பட்டது. பின்னர் எதிரியை காவல் நிலையம் கொண்டுவந்து பெரம்பலூர் மதுவிலக்கு அமலாக்க பிரிவு காவல் நிலைய குற்ற எண். 46/2025 சட்டப்பிரிவு 4(1)(C) TNP Amendment Act 2024ன்படி வழக்கு பதிவு செய்தேன். நிலையத்தில் நான் பதிவு செய்த முதல் த்கவல் அறிக்கை அ.த.சா.ஆ. 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்னர் எதிரியை தக்க காவல் நிலைய பிணையில் விடுவித்தேன். பின்னர் சாட்சிகள் கிருஷ்ணமூர்த்தி, ரமேஷ் ஆகியோர்களை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்து கடந்த 23.03.2025ம் தேதி அன்று மேற்படி சட்டப்பிரிவு 4(1)(C) TNP Amendment Act 2024ன்படி குற்ற இறுதி அறிக்கை எதிரியின் மீது தாக்கல் செய்தேன்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்ட ஆவணங்களின் அடிப்படையில் சரிவர புலன் விசாரணை செய்யாமல் இறுதி அறிக்கை தாக்கல் செய்து அதற்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>மறு விசாரணை</u>**

இல்லை.

Taken down by / before me in open court
read over / interpreted to the witness
in the presence of the accused / accused/
pleader and admitted by the witness to be correct

THAARINI V C

Digitally signed by THAARINI V C
Location: Judicial Magistrate No.1, Perambalur
Date: 2026.08.05 15:40:42 +0530

Judicial Magistrate No.1
Perambalur.